**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை : திரு.ஜெ.ஹரிஹரசுதன். B.A., LLB., (Hons)**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ஆம் நாள் திங்கட்கிழமை**

**CC. No. 373 of 2023**

**CNR No.TNRM02-008346-2022**

**வழக்கு சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | பஜார் காவல் நிலையம்<br>குற்ற எண். 457/2020 |
| | **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | : | ரவிச்சந்திரன் |
| 3. | த/பெ | : | துரைராஜ் |
| 4. | தொழில் | : | விவசாயம் |
| 5. | முகவரி | : | கோட்டைமேடு தெரு, இராமநாதபுரம். |
| 6. | வயது | : | 41 |
| 7. | சம்பவ நாள் | : | 27.09.2020 |
| 8. | புகார் தேதி | : | 27.09.2020 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 27.02.2021 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 27.02.2021 (காவல்நிலைய பிணையில் சென்றுள்ளார்) |
| 11. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:44:36 +0530

| | | | |
|---|---|---|---|
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 24.06.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.06.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதால் வழக்கு முடிக்க காலதாமதமானது. |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 முதல் விசாரணை 24.06.2026, குறுக்கு விசாரணை 24.06.2026<br>அ.சா.2 முதல் விசாரணை 24.06.2026, குறுக்கு விசாரணை 24.06.2026<br>அ.சா.3 முதல் விசாரணை 24.06.2026, குறுக்கு விசாரணை 24.06.2026 |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 25.06.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை. |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின் படியான மனுக்கள் | : | **கு.ப.ம.எண்**.2886/2026<br>அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் 24.06.2026–ம் தேதியன்று மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.G.இளங்கோ |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.S.சண்முகநாதன் |
| 22. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்றும் பொய் என்றும் கூறினார். |

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:44:46 +0530

| | | | |
|---|---|---|---|
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 29.06.2026 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 29.06.2026 |
| 25. | நீதிபதியின் முடிவு | : | i) முடிவாக **எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன்** கீழான குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எவ்வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் **குற்றவாளி இல்லை** என்றும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி பிரிவுகளில் இருந்து எதிரி கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் **விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>ii) இவ்வழக்கில் எதிரி எழுதி கொடுத்த பிணையபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br><br>iii) இந்த வழக்கில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. ஆகையால் அதைப் பொருத்து உத்தரவு எதுவும் இல்லை. |

இவ்வழக்கு 03.06.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 25.06.2026 தேதியன்று இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை II

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:44:55 +0530

திரு.G.இளங்கோ, அவர்கள் ஆஜராகியும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சண்முகநாதன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

**தீர்ப்பு**

**1.** இராமநாதபுரம் மாவட்டம் பஜார் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கின் புகார்தாரர் இராமநாதபுரம் பனையூர் கிராமத்தைச்சேர்ந்த சேகர் மகன் சுந்தரமூர்த்தி என்பவர் கடந்த பிப்ரவரி மாதம் குலதெய்வம் அத்தியூத்து பகவதியம்மன் கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று கிடாய் வெட்டி சாமிகும்பிட்டு கொண்டிருந்தபோது புகார்தாரர் தங்கையின் கணவர் சாட்சி–2 நல்லசிவம் அவரது தங்கையின் கணவர் முருகன் மற்றும் வாலாந்தரவையை சேர்ந்த நபர்கள், கோட்டைமேடு தெருவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ஆகியோருக்கு குடிபோதையில் வாய் தகராறு ஏற்பட்டு பிரச்சனை ஏற்பட்டதில் ரவிச்சந்திரனுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விரோதம் கொண்டு 27.09.2020ம் தேதி மாலை 16.00 மணிக்கு சாட்சி–2 நல்லசிவம் உச்சிப்புளியில் டைல்ஸ் வேலை பார்த்துகொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி இராமநாதபுரம் கோட்டைமேடு தெருவைச் சேர்ந்த துரைராஜ் மகன் ரவிச்சந்திரன் சாட்சி–2 நல்லசிவம் என்பவருக்கு போன் செய்து இன்று என் மகளுக்கு பிறந்த நாள் கேக் வெட்டப்போகிறோம், உடனே புறப்பட்டு வாடா என்று சொன்னவுடன் நல்லசிவம் வீட்டிற்கு வந்து அவரது மனைவியுடன் ரவிச்சந்திரன் வீட்டிற்கு செல்லுவதாக சொல்லிவிட்டு சென்றுள்ளார். அப்போது சாட்சி–2 நல்லசிவத்தை எதிரியானவர் கையால் உடம்பில் மாறி மாறி அடித்து சாதாரணக்காயம் ஏற்படுத்தியும், பின்பு தகவல் தெரிந்து புகார்தாரரும் அவரது தங்கை சாட்சி–3 ஜெயசூர்யாவும் போய் கேட்டதற்கு எதிரியானவர் புகார்தாரரை பார்த்து நீ என்னடா இங்கே வாரா சுன்னி மகனே என்று

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:45:06 +0530

அசிங்கமாகவும், அருவருக்கத்தக்க வார்த்தையால் பேசியும், புகார்தாரரின் தலையில் கட்டையை கொண்டு அடித்து ரத்தக்காயமும், உடம்பில் அடித்து சாதாரணக்காயமும் ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார். மேலும் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் சாட்சி–2 நல்லசிவம் ஆகிய இருவரும் மருத்துவமனையிலிருந்து முழுமையாக சிகிச்சை பெறாமல் தன்னிச்சையாக சொன்றுள்ளதால் சிகிச்சையளித்த மருத்துவர் (NO OPINION) என சான்று வழங்கியுள்ளார். எனவே இவ்வழக்கின் எதிரியானவர் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்கானது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் குற்றச்சாட்டை வனைந்து விளக்கி கூறி வினவியபோது, எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். மேலும் எதிரி தரப்பில் வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டினர். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

**5.** அரசு தரப்பில் 7 சாட்சிகள் பட்டியலிடப்பட்ட நிலையில் அரசு தரப்பில் 8 வதாக கூடுதல் சாட்சி இணைக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 7 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பால் தவிர்க்கப்பட்டும், மற்ற சாட்சிகள் அ.சா.1 முதல்

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:45:17 +0530

அ.சா.3 வரையிலான சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர். மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் அரசு தரப்பில் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம், முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் விபத்து பதிவேடுகள் ஆகியவைகள் முறையே அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டது. மேலும் அரசு தரப்பில் சான்றுபொருள்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:**

இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 (திரு.சுந்தரமூர்த்தி) நான் கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு என் தங்கை கணவரை தேடிச்சென்றபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டதால் காயம் ஏற்பட்டது என்றும், இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும், பிறழ் சாட்சியமளித்துள்ளார். மற்றொரு காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 (திரு.நல்லசிவம்) அ.சா.1 எனது மைத்துனர் என்றும், கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு எதிரி அவர் மகள் பிறந்தநாள் விழாவிற்கு அழைத்ததின் பேரில் நான் சென்றபோது தடுமாறி கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டது என்றும், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும், பிறழ் சாட்சியமளித்துள்ளார். இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக இணைக்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்த பஜார் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.3 (திருமதி.கலா) இந்த வழக்கில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது பற்றியும், சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது பற்றியும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது பற்றியும், காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரணை செய்து விபத்து பதிவேடுகள் பெற்றுள்ளது பற்றியும், புலன் விசாரணை

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:45:32 +0530

முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது பற்றியும், சாட்சியமளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் சாட்சியமளித்துள்ளதில் எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி கு,வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது, எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து பொய் என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று 313(1)(ஆ)–ன் படியான விசாரணையில் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>8. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் :</u>**

இவ்வழக்கின் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுதரப்பில் எந்தவொரு தகுந்த சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா ? என்பதேயாகும்.

**<u>தீர்வு:–</u>**

**9.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறு பரிசீலனை செய்த பொழுது பஜார் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கோட்டைமேடு தெருவிலுள்ள எதிரியின் வீட்டின் முன்பாக கடந்த 27.09.2020ம் தேதியன்று மாலை 04.00 மணியளவில் எதிரியானவர் முன்விரோதம் கொண்டு அ.சா.2ம் கையால் உடம்பில் மாறி மாறி அடித்து சாதாரணக்காயம் ஏற்படுத்தினார் என்றும், பின்பு தகவல் தெரிந்து அ.சா.1ம் அவரது தங்கை சாட்சி–3 ஜெயசூர்யாவும் போய் கேட்டதற்கு எதிரியானவர் அ.சா.1ஐ பார்த்து அசிங்கமாக தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், அ.சா.1ன் தலையில் கட்டையை கொண்டு அடித்து எதிரி சாதாரணக்காயம் ஏற்படுத்தினார் என்றும், அரசு தரப்பில் வழக்காக உள்ளதை காண முடிகிறது.

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:45:59 +0530

**10.** இந்த வழக்கில் வாதியான அ.சா.1 எதிரியை தெரியும் என்று அடையாளப்படுத்தியபோதிலும், அவரது சாட்சியத்தில் 4, 5 வருடங்களுக்கு முன்பு என் தங்கை கணவரை தேடிச்சென்றபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டதால் காயம் ஏற்பட்டதாகவும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாததாகவும் தெரிவித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாகவும், எதிராகவும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். மேலும் மற்றொரு காயம்பட்ட சாட்சியான அ.சா.2 ம் எதிரியை தெரியும் என அடையாளப்படுத்தியபோதிலும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தான் தடுமாறி கீழேவிழுந்து காயம்பட்டதாகவும், வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாததாகவும், தெரிவித்து பிறழ் சாட்சியமளித்துள்ளார். மேற்சொன்னவாறு மேற்படி சாட்சிகளின் சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக அமைவதோடு, அவர்கள் எதிரியை இந்த வழக்கு சம்பவத்தோடு இணைக்கும் வகையில் சற்றும் எதுவும் தெரிவிக்கவில்லை.

**11.** மேற்சொன்னவாறு அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் அமைந்துள்ள நிலையில் அரசு தரப்பானது சம்பவம் குறித்தும், சம்பவத்தின் போது எதிரியின் குற்ற செயல் குறித்தும், அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்தவாறு சாட்சியம் அளிக்கும் விதமாக வேறு நபர்கள் எவரேனையும் சாட்சியாக விசாரணை செய்திருந்தால், அது அரசு தரப்பு வழக்கிற்கு பலம் சேர்க்கும் விதமாக அமைந்திருக்கும், ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 வது சாட்சிகளின் சாட்சியம் முன்பு சொன்னது போல் அரசு தரப்பிற்கு எதிராக அமைந்துள்ள நிலையில், அவர்களின் சாட்சியம் எதிரிக்கு எதிரான அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாகவும், தகுந்ததாகவும் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி காரணத்தினால் இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த விசாரணை அதிகாரியான அ.சா.3 ன் சாட்சியமும் அவரின் மூலம் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களும், அரசு தரப்பு வழக்கை எதிரிக்கு எதிராக நிரூபணம் செய்ய எந்த வகையிலும் உதவிகரமாக அமையவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படியான சங்கதிகள் இந்த

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:46:16 +0530

வழக்கு சம்பவம் உண்மைதானா என்றும், உண்மையில் போலீசார் இந்த வழக்கில் முறையாக சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றும், சந்தேகத்தை பெறுமளவு இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

**12.** ஆகவே மேற்படியாக காரணங்கள் அனைத்திலிருந்தும், அ.சா.1 மற்றும் 2 அவர்களது சாட்சியத்தில் தாங்கள் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக தெரிவித்துள்ளதிலிருந்தும், இந்த வழக்கில் அரசு தரப்பானது அதன் வழக்கில் உள்ளவாறு உண்மையில் சம்பவம் நடந்தது என்றோ, அந்த சம்பவத்தின் போது எதிரி அ.சா.2 ஐ கையால் உடம்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றோ, எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டி கட்டையால் தாக்கி காயம் ஏற்படுத்தினார் என்றோ, எந்தவொரு தகுந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல் போதுமான சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம் நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இந்த வழக்கில் நிலவும் சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது இந்த வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை பொறுத்து குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**<u>முடிவு :-</u>**

முடிவாக **எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச-ன்** கீழான குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எவ்வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் **குற்றவாளி இல்லை** என்றும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி பிரிவுகளில் இருந்து எதிரி கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் **விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

| |
|---|
| i) இவ்வழக்கில் எதிரி எழுதி கொடுத்த பிணையபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

HARIHARASUDHAN J
Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:46:35 +0530

| |
|---|
| ii) இந்த வழக்கில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. ஆகையால் அதைப் பொருத்து உத்தரவு எதுவும் இல்லை. |

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:46:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்.

**இணைப்பு :**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. சுந்தரமூர்த்தி (புகார்தாரர்) |
| 2. | அ.சா.2 | திரு. நல்லசிவம் (கண்ணுற்ற சாட்சி) |
| 3. | அ.சா.3 | திருமதி. கலா (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 27.09.2020 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | 27.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | 27.09.2020 | புகார் மனு |
| 4. | அ.சா.ஆ.4 | 27.09.2020 | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | 27.09.2020 | மாதிரி வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6 | 27.09.2020 | அ.சா.1 ன் விபத்து பதிவேடு |
| 7. | அ.சா.ஆ.7 | 27.09.2020 | அ.சா.2 ன் விபத்து பதிவேடு |

**அரசுத்தரப்பு சான்றுபொருள்** : இல்லை

**எதிரி தரப்பு சாட்சி :** இல்லை

**எதிரி தரப்பு சான்றவாணம் :** இல்லை

**எதிரி தரப்பு சான்றுபொருள்:** இல்லை.

**குறிப்பு:**

1. எதிரி வழக்கு விசாரணயின்போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.29 05:47:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்.